ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 5. ஏப்ரல், 1942 நெ. 1.

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயண

எடிடர்.

ஸ்ரீமான்

வி. கிப்பன்ன, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்
டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.

1. தலையங்கம்—

சந்தா உயர்வு ... ... ... 197

பஞ்சாயத்து மசோதாக் கமிட்டி ... ... 198

2. நெல்லிக்காயின் பெருமை ... ... 199

3. இந்தியாவில் மருந்துகள் உற்பத்தி ... ... 200

4. விவசாய விஷயம் ... ... 201

5. செய்தித் திரட்டு ... ... ... 201

6. சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன் ... 205

7. பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் பொதுக்கூட்டம் ...

கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal.

VOL. V] APRIL, 1942. [No. 1.


*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

## Please note the Subscription is Rs. 3 per annum.

With the necessary permission obtained the subscription for this journal per annum has been raised from the date of this issue—the 1st of the fifth volume—to Rupees Three. Every Panchayat subscriber to this journal is empowered to spend this amount out of its funds. As we have so often repeated the strength and influence of this journal and of our Provincial union depend on the strength of its subscriber members. The usefulness of the journal also can be increased immeasurably if all the Panchayats in the province join as members. It is the duty therefore of every Panchayat not only to pay the exhanced subscription of Rupees three from its funds but also to induce neighbouring Panchayats who are not already members to join as members. The union and the journal belong to everyone of the Panchayat and, by joining in large numbers the Panchayats can utilise these institutions to greater and greater service into themselves. Now that once more Panchayat Legislation is on the anvil we request every Panchayat Board to take full interest and give the common cause the best help it can render.

## The Panchayat Bill Committee.

We publish elsewhere the Government communique appointing an advisory committee to consider the criticisms directed against the Panchayat Bill as published and make the necessary constructive suggestions. The committee has on it altogether nineteen members. The third adviser to Government Mr. T. G. Rutherford I.C.S., is president. The Director of Public Health and the Director of Public Instructions will be co-opted members when their subjects are discussed. The Panchayat has long been conceded as the lowest administrative unit for Indian conditions. In a democratic state, which is the ideal for us, this unit is bound to be the best form of decentralised power permitting of full play of initiative in the

masses of the country. We have so very often adverted to the measures by which this decentralisation may be achieved. It is sufficient to stress here the one point that the committee have to look upon the question of Panchayats, not as forming little authorities to whom power devolves by deputation from above but as the fundamental root structure on which the whole tree of the state has to be reared. What resources may best be provided for the Panchayats, how wide powers may be left in their hands, how broadbased should be the constituencies from which these units are organised, how best they can combine to form larger units for common purposes sharing responsibilities for the well being of larger and larger units in the national structure—these have to be more intensely examined than what has for some time obtained, namely the processes by which Panchayats may be better controlled and made to put their house in order. Control, advice and co-ordination have to be provided for. We do not deny the need there is for these. But these comr in only when provision has been made in the first instance foe Panchayats to grow into developed organisms with a soul of their own. It is our earnest prayer, therefore, to the members of the committee to banish, once for all, from their minds that their task is merely to tinker a little here and a little there. They will boldly face the problem, we are sure, under the leadership of Mr. Rutherford whose sympathies for fairly autonomous Village Panchayats has been well known. A fresh mind, a broad outlook, and a fundamental sympathy for the masses in the villages who have no doubt their own short comings as every one of us has his own and who have yet the inalienable right to order their own house are qualities that will go a long way to put Panchayat legislation on a satisfactory basis. We do hope that the friends on the committee have these qualities in abundance. The presence of the Directors of Health and Education as Co-opted members need not necessarily mean that they are there to protect the interests of their departments against possible encroachments by the Panchayats. We expect them to be helpful in evolving a policy of Health and Educational administration which will ultimately transfer power in these matter to the Panchayats and their Joint Committees, making departmental officers honoured technical advisers. We do not envisage that all this can be done or will be done immediately but we do request the members of the Committee as well as the heads of Departments to keep the future in mind and bestow thought on what possible avenues of approach are available to liberalise these administrations in order to allocate to Panchayats a substantial share of the service that hat to be rendered under Public Health and Education ; for, after all is is the villager who has to Co-operate to make this services efficient and it is for him that this service is rendered.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 5 | ஏப்ரல், 1942. | No. 1 |
| --- | --- | --- |

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### சந்தா உயர்வு.

அதிகாரிகள் உத்தரவுபெற்று இந்த மாதமுதல், ஐந்தாவது ஆண்டின் முதல் இலக்கமுதல் நமது சஞ்சிகையின் சந்தா மூன்று ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. சஞ்சிகை வாங்கும் ஒவ்வொரு பஞ்சாயத் சபைக்கும் இந்தத் தொகையைத் தனது நிதியிலிருந்து கொடுக்கும்படி அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் பலமுறை கூறியிருக்கும் வண்ணம், இந்தப்பத்திரிகை நமது மாகாண யூனியன் இவற்றின் பலமும் செல்வாக்கும் சந்தாதார்களின், பலத்தைப் பொறுத்திருக்கிறது. மாகாணத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத் சபைகளும் சந்தாதார்களாகச் சேர்ந்தால் இந்தப் பத்திரிகையைப் பல வழிகளில் சிறப்பாக இன்னும் அதிகப் பயனுள்ளதாகச் செய்யலாம். எனவே, ஒவ்வொரு பஞ்சாயத்து சபையும் இந்த அதிகச் சந்தாவைச் செலுத்துவதுடன் முன்னரே சந்தாதாரா யில்லாத அக்கம்பக்கத்துப் பஞ்சாயத்து சபைகளையும் சந்தாதாராகும்படி தூண்டவேண்டியதும் கடமையாகும். யூனியனும், பத்திரிகையும் ஒருவரின் தனி உடைமை யல்ல. ஒவ்வொரு பஞ்சாயத்து சபைக்கும் அது உரிமையாக உள்ளது. எனவே, இதில் ஏராளமாகச் சேர்வதால், இவற்றைத் தங்களுக்கு மிகுதியும் பயனுள்ளதாகச் செய்துகொள்ளலாம். இப்பொழுது பஞ்சாயத்து மசோதா யோசனையில் இருப்பதால், ஒவ்வொரு பஞ்சாயத்து சபையும் இதில் அதிக சிரத்தை யெடுத்து இதனைப் பெரிதும் ஆதரிப்பார்களென்று வேண்டிக் கொள்கிறோம்.

## பஞ்சாயத்து மசோதாக் கமிட்டி.

பஞ்சாயத்து மசோதாவைப்பற்றிய கண்டனங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து நிர்மாணமான யோசனை கூறுமாறு அரசாங்கத்தார் ஓர் ஆலோசனைக் கமிட்டி ஏற்படுத்தி வெளியிட்டிருக்கிற அறிக்கையை மற்றொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். கமிட்டியில் மொத்தம் 19 மெம்பர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்தின் மூன்றாவது அட்வைஸரான மிஸ்டர் T. G. ருதர்போர்டு, I.C.S , கமிட்டியின் தலைவராவார். சுகாதார இலாகா டைரக்டரும், கல்வி இலாகா டைரக்டரும் அவர்கள் விஷயங்கள் வாதத்திற்கு வரும்பொழுது அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்தியாவின் நிலைமைக்கு, பஞ்சாயத்து சபையானது கடைசி நிலையில் உள்ள நிர்வாக ஸ்தாபனமாக நெடுங்காலமாகக் கருதப்பட்டுவருகிறது.

நமது கொள்கைப்படிக்கான ஜனநாயக ராஜாங்கத்தில் பஞ்சாயத்து சபையே தேசத்து பொது ஜனங்களின் ஊக்கத்துக்கும் முயற்சிக்கும் பூரணமாக இடம் கொடுப்பதாய், அதிகாரம் வகிக்கும் சிறந்த ஸ்தாபனமாகும். இதுபற்றி நாம் பலமுறை எழுதியிருக்கிறோம். பஞ்சாயத்து சபைகளை மேலேயிருந்து அதிகாரம் பெறுகிற சிறிய ஸ்தாபனங்களாகக் கருதாமல், ராஜாங்க மாகிற விருக்ஷம் முழுமையும் வளரவேண்டிய மூலாதார அடிப்படையாகக் கருதவேண்டும். இந்த விஷயத்தைக் கமிட்டியார் கவனிக்க வேண்டும். பஞ்சாயத்துக்கு ஏற்படுத்தக் கூடிய வருவாய் முறைகள், அவைகளுக்கு விரிவான அதிகாரங்கள் கொடுக்கக் கூடிய முறைகள், இந்த ஸ்தாபனங்கள் அமைப்பதற்குரிய தொகுதிகளை விரிவான முறையில் ஏற்படுத்துவது, அவைகள் பொது நலங்கருதிப் பெரிய தொகுதிகளாகச் சேர்ந்து வேலை செய்வதற்குரிய சிறந்த முறை—இந்த விஷயங்களை யெல்லாம் இதுவரை ஆலோசித்ததைவிட, அதிகமாக ஆழ்ந்து ஆலோசித்து வேண்டுவன செய்யவேண்டும். மேற்பார்வை, ஆலோசனை, ஒத்துழைப்பு எல்லாம் வேண்டியதுதான். இவை அவசியமில்லையென்று நாம் மறுக்கவில்லை. ஆனால், முதலில் பஞ்சாயத்துகள் தங்களுக்கென்று தனி உயிர் உள்ளதாய், நன்றாக வளரும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்தபின்னர்தான் இவற்றைப்பற்றிக் கவனிக்கவேண்டும். அங்கும் இங்கும் ஏதோ சிறிது கவனிக்கவேண்டும் என்று கமிட்டி அங்கத்தினர்கள் நினைக்கலாகாதென்று பெரிதும் வேண்டிக்கொள்கிறோம். கிராமப் பஞ்சாயத்துகள் விஷயத்தில் அநுதாபமுள்ள மிஸ்டர் ருதர்போர்டின் தலைமையில் அவர்கள் விஷயங்களைத் தைரியமாக ஆலோசனை செய்யவேண்டும். புதிய மனப்பான்மையுடனும், விரிந்த நோக்கத்துடனும், அடிப்படையான அநுதாபத்துடனும் கவனித்து பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருப்தியான முறையில் அமைக்க வேண்டும். கமிட்டியில் உள்ள அங்கத்தினர்களான நண்பர்களிடம் இந்தக் குணங்கள் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்றே நம்புகிறோம். தங்கள் இலாக்காவின் உரிமைகளை கிராமப் பஞ்சாயத்துகள் கவர்ந்து விடாமல் பாதுகாப்பதற்காக சுகாதார, கல்வியிலாகாக்களின் டைரக்டர்கள் கமிட்டியில் அங்கத்தினர்களாக இருப்பதாக நினைக்கலாகாது. கல்வி, சுகாதார நிர்வாகங்களை நாளடைவில் பஞ்சாயத்துகளுக்கும் அவற்றின் கூட்டுக்கமிட்டிகளுக்கும் மாற்றக் கூடிய விதத்திலும், இலாகாத் தலைவர்கள் கௌரவமான யோசனைகூறுகிற அதிகாரிகளாக இருக்கும் விதத்திலும் ஒரு முறையை அமைக்கும் விஷயத்தில் அவர்கள் உதவியாயிருக்க வேண்டும். இவை எல்லாம் நடந்துவிடுமென்றோ, அல்லது உடனே

நடந்து விடுமென்றோ நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் எதிர்காலத்தை மனதில் வைத்துக் கொண்டு கல்வி, சுகாதார விஷயங்களில் செய்யவேண்டிய வேலைகளில் போதுமான அளவு பஞ்சாயத்துக்குக் கொடுக்க கூடிய விதத்தில் எந்தெந்த வழிகளில் நிர்வாகத்தைத் தாராளமாகச் செய்யலாமென்பதைச் சிந்திக்கவேண்டுகிறோம்.

ஏனெனில் இந்த வேலைகள் திறமையாக நடைபெறுவதற்குக் கிராம ஜனங்களின் ஒத்துழைப்பே வேண்டியதாகும். அவர்களுக்காகவே இந்த வேலைகள் செய்யப்படுகின்றன.

---

# நெல்லிக்காயின் பெருமை.

---

ஆமலகம் என்று வட மொழியார் வழங்கும் நெல்லிக்காய் மிகவும் அற்புதமான பொருளாகும். நெல்லிக்காயில் கிச்சிலிப்பழத்தைவிட இருபது மடங்கு அதிகமான C வைட்டமின் சத்து இருக்கிறதாம். ஒரு சிறிய நெல்லிக்காயில் இரண்டு பெரிய (ஆரஞ்சு) கிச்சிலிப்பழத்திலுள்ள சத்து அடங்கியிருக்கிறதாம். நெல்லிக் காயிலுள்ள (ஆவிட்) திராவகம் (scurvy) என்ற தோல் ரோகத்தை நீக்க வல்லது. மற்றக் காய் கறிகளைப்போலத் தீயில் வேக வைப்பதால் நெல்லிக்காயின் சத்து அழிந்துபோவதில்லையாம். முதுமை வராமல் தடுப்பதற்கு நெல்லிக்காய் பயன் உள்ளதாம். நெல்லிக்காயில் C வைட்டமின் என்ற ஜீவ சத்து அதிகமாயிருக் கிறதாம்.

சென்ற ஆண்டில் தென்னாட்டின் பல பகுதிகளிலுமிருந்து ஏராளமான நெல்லிக்காய் நீலகிரி கூனூருக்குச் சென்றது. நெல்லிக்காயைக் காய வைத்து அதனை இடித்து அந்தத் தூளைப் புட்டிகளில் அடைத்து அயல் நாடுகளில் போர் புரியும் நமது இந்திய வீரர்களுக்கு அதிகாரிகள் அனுப்புகிறார்கள்.

கிணற்று நீர் இனிமையாயிருப்பதற்காகக் கிணற்றடியில் நெல்லிக்கட்டைகளைப் போட்டு வைக்கும் பழக்கம் இப்பொழுதும் தென்னாட்டில் இருந்து வருகிறது. கரைகளில் நெல்லி மரங்களைக் கொண்ட குளம் குட்டைகளின் நீர் அம்மரங்களின் வேர் நீரில் பாயவதால் மதுரமா யிருப்பது கண்டறிந்த விஷயம்.

## பதநீரின் பெருமை.

நீரா என்று வட நாட்டார் வழங்கும் பனையின் பதநீர், பனஞ்சாறு அல்லது தெளிவில் மிகுந்த ஜீவ சத்து அடங்கியிருக்கிறதாம். இது பற்றி பம்பாயில் போரிவிலி என்னும் இடத்தில் பனைப் பொருள் ஆராய்ச்சி சாலையில் ஆராய்ச்சி செய்து அது மிகச் சிறந்த பானமென்று முடிவு செய்திருக்கிறார்கள். பதநீரைப் பத்தொன்பது பேருக்கு சுமார் மூன்று மாத காலம் கொடுத்து வந்தார்கள். அவர்கள் தனை வரும் பத்து பவுண்டு வரை உடல் நிறையில் அதிகப்பட்டார்கள். நோய் கொண்ட ஒரு பசுவுக்குக் கொடுத்ததில் பசு நோய் நீங்கி நலம் பெற்றதுடன், பாலும் அதிக மாகக் கொடுத்ததாம். ஆனால் நமக்கு இந்த விஷயங்களையெல்லாம் புதிதாக ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியம் இல்லை. தென்னாட்டார் பல நூற்றாண்டு களாகப் பதநீரையும் பனையால் வரும் மற்ற உணவுப் பொருள்களையும் உண்டு பயன் பெற்று வருகிறார்கள். பனங் கள்ளை ஒழிக்க வேண்டுமென்று சட்டம் போட்ட காங்கிரஸ் அரசாங்கத்தார் பதநீரை அதிகமாக அருந்த வேண்டுமென்று நாடெங் கும் பிரசாரம் செய்தால் எவ்வளவோ நன்மை விளைந்திருக்கும். காப்பி, டீ முதலிய பானங்களை அருந்தி நோய் கொள்வதை விட, ஜீவ நீரான பதநீரை அருந்துவதால் மக்கள் பல வகை நன்மைகளை அடையலாம். இதற்கு நல்ல பிரசாரம் வேண்டும்.

---

# இந்தியாவில் மருந்துகள் உற்பத்தி.

அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகிவந்த மருந்து சரக்குகள் பலவற்றை இந்தியா அரசாங்க வைத்திய இலாகாத் தொழிற் சாலைகள் உள் நாட்டிலேயே இப்பொழுது உற்பத்தி செய்கின்றன. இந்திய மருந்து வியாபாரிகளும் பரதேசி மருந்துகளுக்குப் பதிலாக சுதேசி மருந்துகளைச் செய்கிறார்கள். அதனால் இந்தியா அரசாங்க வைத்திய இலாகா அவர்களிடமிருந்து ஏராளமான மருந்துகளை வாங்கிக் கொள்கிறார்கள். 1938-39-ல் சுமார் 16 லட்சத்திற்கும், 1939-40ல் சுமார் 25 லட்சத்திற்கும், 1940-41-ல் ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாகவும் வாங்கியிருக்கிறார்கள். யுத்தம் காரணமாக இந்தியாவில் மருந்து உற்பத்தி விஷயத்தில் அதிக ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது.

∴ ∴ ∴

குடிசைத் தொழில்களுக்காக ஒரு தனியான இலாகா ஏற்படுத்த வேண்டுமென்றும், தனி டைரக்டர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், சர்வ கலாசாலை மாணவர்கள் சிலர் ஓய்வு நாட்களில் குடிசைத் தொழில்களைப்பற்றி விசாரணை செய்யுமாறு இதற்காக ஆறு மாணவர்களுக்கு இருபது ரூபாய் வீதம் உதவியளிக்க வேண்டுமென்றும் மைசூர் குடிசைத் தொழிற் கமிட்டியார் அதிகாரிகளை வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

∴ ∴ ∴

வட ஆற்காடு ஜில்லாவில் விவசாயிகளின் கடன்களைக் குறைக்கும் முறைகளைப் பற்றி வேலூரில் சென்ட்ரல் கோவாபரேட்டிவ் பாங்கித் தலைவர் ஸ்ரீ வி. யம். ராமசாமி முதலியார் தலைமையில் கூடி யோசனை செய்தார்கள். ஐக்கிய நாணய இலாகா ஜாயிண்டு ரிஜிஸ்டராரும் விவசாய டிப்டி டைரக்டரும் வேலூர் கோவாபரேடிவ் பாங்கின் நிர்வாக சபையாரும் இருந்தார்கள். ரிஜிஸ்டரார் ரங்கசாமி நாயுடு விவசாயிகள் ஐக்கிய நாணயச் சங்கத்திலிருந்து வாங்கின பணத்தைத் தங்கள் மாசூல்களின் மிச்சத்திலிருந்து திரும்பக்கொடுப்பதென்ற யோசனையே மறந்து போய்விட்டதென்று சொன்னார்.

கடன் விண்ணப்பத்தில், விவசாயத்திற்கும் கிஸ்து கட்டுவதற்கு, குடும்பச் செலவுக்கு, பழைய கடன் தீர்ப்பதற்கு என்று விவரம் தெரிவிக்க வேண்டுமென்றும் கிஸ்தாயிருந்தால் பணத்தை விவசாயியிடம் கொடாமல், நேரே கஜானாவில் செலுத்திவிடவேண்டுமென்றும் விவசாயம் குடும்பச் செலவுக்கானால், ரூபாய்ச் செக்குகள் கொடுத்து அவற்றைப் பண்டசாலைகளிடம் கொடுத்துச் சாமான் வாங்கிக் கொள்ளச் செய்ய வேண்டுமென்றும் அவர் சொன்னார். விவசாய இலாகாவும் ஐக்கிய இலாகாவுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் சொன்னார். விவசாயிகளுக்கு விவசாய இலாகா விதைகள் சப்ளை செய்யப்படவேண்டுமென்றும், அதில் அதிக மாசூல் கிடைக்குமென்றும் சொன்னார். இந்த திட்டம் சீராக நடைபெற வேண்டுமானால் மாசூலின்மீது மேற்பார்வையிருக்கவேண்டும். விவசாயி தான் கடன் வாங்கியிருக்கிற அளவுக்காவது மாசூலை விற்பனைச் சங்க மூலமாக விற்பனைக்கு அனுப்பச் சித்தமாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அடுத்த ஆண்டு கடன் கொடுக்கலாகாது. கிலக்கடலையாயிருந்தால், மாசூல் முழுமையும் விற்பனைச் சங்கத்திற்கு அனுப்பிவிட வேண்டும்.

# விவசாய விஷயம்.

இந்திய ஏகாதிபத்ய விவசாய ஆராய்ச்சி சபையின் ஆலோசனை சபையார் மார்சுமாதம் 2ந்தேதி கூடி, விவசாய ஆராய்ச்சியின் பயனை விவசாயிகளுக்குப் பயன்படும்படி செய்வதற்கு ஒரு திட்டத்தை அங்கீகரித்தார்கள். இந்தப் படி மத்ய மாகாணத்தில் மூன்று கிராமங்களிலும், ஐக்கிய மாகாணத்தில் நாலு கிராமங்களிலும் நிபுணர்களின் தலைமையில் புதிய முறையில் விவசாயிகளை நிலத்தைப்பண்படுத்தல் பயிரிடுதல் முதல் பல வேலைகளையும் செய்வார்கள். விவசாய சம்பந்தமாக ஒரு திட்டமான முறையை அரசாங்கத்தார் மேற்கொள்ள வேண்டுமென்று சபையார் வற்புறுத்துகிறார்கள். சென்னை மாகாணத்தில் விவசாய இலாகா மேற்பார்வையில் ஐக்கியசங்கங்கள் மூலமாக சிறந்த வித்துக்களைக் கொடுப்பதென்று யோசனை செய்யப்பட்டிருக்கிறது. முதலில் 7500 ஏக்கரிலும், அடுத்த ஆண்டில் 3 லட்சம் ஏக்கரிலும் நெல்சாகுபடி செய்து பார்ப்பதென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

சென்ற மகா யுத்தத்தில் நமது துருப்புகளுக்குப் பால் வெண்ணெய் சப்ளை செய்வதற்காக மெசபொடேமியாவுக்கும் மற்ற இடங்களுக்கும் பசுக்களை அனுப்ப நேர்ந்தது. ஆனால் இப்பொழுது கட்டிப்பாலும் பாற்பவுடரும், வெண்ணெயும் பாற்கட்டியும் அனுப்பப் படுகின்றன.

# செய்தித் திரட்டு.

**கதர் வளர்ச்சி.**

1940ம் ஆண்டில் அகில இந்திய சர்க்கா சங்கத்தார் தேசமெங்கும் 51 லட்ச ரூபாய் மதிப்புள்ள (பருத்தி பட்டு ரோமம் மூன்றும் அடங்கிய) கதர்த் துணிகள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். அவை 77 லட்சத்திற்கு விற்பனையாயிருக்கின்றன.

1928-29ல் 31 லட்சம் மதிப்புள்ள கதர்தான் உற்பத்தியாயிற்று.

| | | |
|---|---|---|
| 1940ல் அ. இ. ச. சங்கத்தில் வேலைசெய்தவர்கள். | | 2,933 |
| கொடுத்த சம்பளம் | ... | ... 6,12,380 |
| 50 ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்குவோர் | | ... 83 பேர் |
| வேலை நடந்த கிராமங்கள் | ... | ... 13,451 |
| நூல் நூற்றவர்கள் | ... | ... 2,54,968 |
| நெவுக்காரர்கள் | ... | ... 16,801 |
| மற்ற வேலையாட்கள் | ... | ... 4,377 |
| உற்பத்தி நிலையங்கள் | ... | ... 608 |
| நூற்றவர்க்குக் கூலி | ... | ... 19 லட்சம் ரூ. |
| நெசவுக்காரர் கூலி | ... | ... 10 லட்சம் |
| மற்றவர் கூலி | ... | ... 4,83,611 |
| மொத்தக் கூலி | ... | ... 34,65,409 ரூ. |

தேனின் மகிமை.

தேன் ஒரு சத்துள்ள சிறந்த உணவாகும். அதில் உள்ள சர்க்கரை சத்து தேனீக்களால் உற்பத்தி செய்யப்பட்டு எளிதில் ஜீரணிக்கத்தக்கது. அதில் உடம்புக்கு வேண்டிய திராவகங்களும் லோக உப்பும் அடங்கியிருக்கின்றன. தேனை உணவுடன் சேர்த்துக்கொள்வதால் மிகுந்த நன்மை ஏற்படுகிறது. இப்பொழுது நமது நாட்டில் தேன் உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறது. ஏழை மக்கள் வருவாயைக் கருதியும் படித்தவர்கள் பொழுது போக்காகவும் தேனீ வளர்க்கும் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள்.

* * *

பூலோகத்தில் மற்ற நாடுகளைவிட இந்தியாவில் பச்சை முந்திரிப்பழம் எக்கராவுக்கு உற்பத்தி வீதம் அதிகமாயிருக்கிறதாம்; இந்தியாவில் முந்திரிச்செடிச் சாகுபடியை மூன்று மடங்கு அதிகப்படுத்த யோசனை நடக்கிறது. அவ்வாறானால் அதனால் வரும் வருவாய் எழுபது லட்ச ரூபாய் அதிகமாகும்.

* * *

மலேரியா இந்தியாவில் கொடிய நோயாயிருந்துவருகிறது. ஆண்டுதோறும் அதனால் 12½ லட்சம்பேர் சாகின்றார்கள். பத்துக்கோடிப் பேருக்கு அந்த நோய் வருகிறது.

* * *

கால்நடைக் காட்சி.

அகில இந்தியக் கால்நடைக் காட்சியின் பகுதியாக பெங்களூரில் ஜனவரி மாதம் 17ந்தேதி முதல் 20ந்தேதி வரை தென்பகுதிக் கண்காட்சி ஒன்று நடந்தது. தென் இந்தியாவிலும் மத்திய மாகாணத்திலும் பம்பாய் மாகாணத்தின் தென் பகுதியிலுமிருந்து கால் நடைகள் வந்திருந்தன. டில்லியில் நடந்த அகில இந்தியக் காட்சியைப்போலவே, சுமார் 800 மாடுகள்வரை வந்திருந்தன. மைசூரில் பேர் போன அமிர்தமால், ஹலிகர் மாடுகளே பாதிவரை யிருக்கும். அடுத்த படியான காங்கயம் மாடுகள் நூறுவரை வந்திருந்தன. வெங்கோல், நாக்புரி மாடுகள் நாற்பது வந்திருந்தன. பர்கூர், கியோனி, கில்லாரி, கிருஷ்ணா மாடுகளும் கொஞ்சம் வந்திருந்தன. சிந்தி மாடுகளும், முரா எருமைகளும் வந்திருந்தன. வந்த மாடுகள் எல்லாம் சிறந்தவையாகும். தென்னாட்டிலும், மைசூரிலும் மிகுந்த செம்மறியாடுகளும் சுமார் இருநூறு வரை வந்திருந்தன. மலையாளத்து வெள்ளாடுகளும் வந்திருந்தன.

* * *

மாட்டுத்தீனிவகைகளும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. பிரசாரங்களும் அறிக்கைகளும் இடம் பெற்றிருந்தன.

பல சாக்குகளும் வைக்கப்படடிருந்தன. மைசூரில் உள்ள அம்மைப் பால் உற்பத்தி சாலையார் பல சாமான்களை வைத்திருந்தார்கள். செம்மறியாடுகள், அவற்றின் ரோமம் இவற்றின் அபிவிருத்திக்காக மைசூரில் நடக்கும் வேலைகளும் காட்டப்பட்டன. கம்பளிகளும் போர்வைகளும் காட்சியில் இருந்தன. முட்டைகளும், நெய்களும் பழவகைகளும் கூடக் காட்சியில் இடம் பெற்றிருந்தன.

இந்தியாவில் ஒன்பதரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள உருளைக்கிழங்கு உற்பத்தியாகிறது. ஆனால் பத்து லட்சம் மணங்குகளுக்கு மேலாக ஆண்டுதோறும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாவதால், இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய இடம் இருக்கிறது.

* * *

யுத்தம் தொடங்கிய பின்னர் இந்தியாவில் இருப்புப்பாதையில் ஜனங்களின் பிரயாணமும் சரக்குகளின் ஏற்றுமதியும் அதிகப்பட்டிருக்கிறது. 1941ம் வருஷம் டிசம்பர் மாதத்துடன் முடிந்த 9 மாதத்தில் துருப்புகள், யுத்தக் கைதிகள், சாமான்கள் முதலியவைகளைக் கொண்டு போவதற்காக சுமார் இரண்டாயிரம் ஸ்பெஷல் வண்டித் தொடர்கள் போயிருக்கின்றன.

* * *

உலகத்தில் உற்பத்தியாகும் 217 மில்லியன் டன் மண் எண்ணெயில், அமெரிக்கா 134 மில்லியன் டன் உற்பத்தி செய்கிறது. ருஷ்யாவும் வெனிசுலாவும் சேர்ந்து 47 மில்லியன் டன் உற்பத்தி செய்கிறது. ஒரு மில்லியன்—பத்து லட்சம். பத்து மில்லியன் ஒரு கோடி.

* * *

அகில இந்திய ரேடியோவுக்கு சுமார் ஒன்றரை லட்சம் பேர் லைஸென்ஸ் எடுத்திருக்கிறார்கள். ஒரு லைஸென்ஸில் சுமார் ஐந்துபேர் கேட்கிறார்கள். ரேடியோவில் பதினொரு பாஷையில் செய்தி பரப்புகிறார்கள்.

* * *

1941ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதி யெடுத்த ஜனசங்கையின்படி இந்தியாவின் ஜனத்தொகை சுமார் 39 கோடி. 1931 ஜனசங்கை 33 கோடியும்.

∴ ∴ ∴

கல்கத்தாவிலுள்ள சர்க்கார் தொழிற்சாலைகளில் யுத்தம் காரணமாக இதுவரை இந்தியாவில் செய்யாத பைனுக்குலர்க் கண்ணாடிகளை ராணுவத்திற்காக ஏராளமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். மூக்குக்கண்ணாடிகள் செய்வது பற்றியும் ஆராய்ச்சி நடந்து வருகிறது.

* * *

களிமண் தொழில்.

1931-ம் ஆண்டு ஜனசங்கைப்படி இந்தியாவில் சுமார் 12 லட்சம் பேர்கள் களிமண் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்த படியாக சுமார் 2 லட்சம் பேர்கள் நிலக்கரி வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்து நாதர் பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து மோகஞ்சோ தாரோவில் சிறப்பாக நடந்த இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கிராமத்துக் குலால மக்களே யாவர் என்று டாக்டர் க்ரூக் ஷாங் ஓர் அறிக்கையில் கூறுகிறார். மங்களூர் ஓடுகள் ஆஸ்ட்ரேலியா, சிங்கப்பூர் வரை ஏற்றுமதியாகிச் செல்லுகின்றன. பேஸில் மிஷன் என்ற கிருஸ்தவ சங்கத்தார் மங்களூர் ஓட்டுத் தொழிலை நூறு ஆண்டுகளுக்குமுன் தொடங்கினார்கள். இந்த ஓடுகள் நகூணபிரான்ஸில் உபயோகமாகும் ஓடுகளைப்போல உறுதியாகவும் சேர்த்தியாகவும் இருக்கின்றன. மிகுந்த உஷ்ணப் பிரதேசங்களில் உபயோகிக்கும் ஒருவகை ஓடுகளையும் இங்கே செய்கிறார்கள்.

* * *

அகில இந்தியக் கால்நடைக் காட்சி.

பிப்ரவரி மாதம் 16-ந் தேதி புது டில்லியில் நடந்த கால்நடைக் காட்சியில் ஆடு மாடுகளும், பசுக்களும், பறவைகளும் வந்திருந்தன. பறவை வகையில் சுமார் 500 வந்திருந்தன. 700 பசுக்களும், காளைகளும், எருமைகளும் வந்திருந்தன. பஞ்சாப், பம்பாய், பலுசிஸ்தான், மத்திய மாகாணம், முதலிய பகுதிகளிலிருந்து இவை வந்திருந்தன. ஆனால் தென்னாட்டிலிருந்து எதுவும் போனதாகத் தெரியவில்லை. சிறந்தவற்றுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டபின் பிப்ரவரி மாதம் 21-ந் தேதி காட்சி முடிந்தது.

கைத்தறி நெசவுத் தொழிலுக்கு 1943-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிய உதவி அளிப்பதென்று அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். பட்டுத்தொழிலுக்கு இந்தியா அரசாங்கத்தார் 1935-36 முதல் ஒரு லட்சம் ரூபாய் உதவி வருகிறார்கள். அதற்கும் 1943 மார்ச் முடிய உதவியளிப்பார்கள்.

யுத்தம் காரணமாக ஜமுக்காளத்தொழிலுக்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. 1941-42-ல் துருப்புகளுக்காக இருபது லட்சம் ஜமுக்காளத்திற்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்.

குடிசைத் தொழிலுக்கும் சிறிய அளவில் நடைபெறும் கம்பளி மயிர்த் தொழிலுக்கும் 1936-37 முதல் 1940-41 முடிய நாலு வருஷத்தில் வருஷத்திற்கு 5 லட்சம் ரூபாய் கொடுப்பதென்று இந்திய அரசாங்கத்தார் முடிவு செய்திருந்தார்கள். இந்த உதவி இப்பொழுது 1943 மார்ச் முடியும்வரை கொடுக்கப்படும்.

தென் ஆபிரிக்கா விவசாய இலாகா மிக நல்ல வேலை செய்து வருகிறது. விவசாய சம்பந்தமான பல வேலைகளிலும் சென்ற ஆண்டில் 3170 உத்யோகஸ்தர்கள் சேவை செய்திருக்கிறார்கள். சுமார் 39 லட்சம் பவுண் செலவாயிருக்கிறது. இதில் விவசாயிகளுக்கு உதவியாகப் பாதிக்கு மேலே செலவாயிருக்கிறது.

* * *

ஜப்பான் யுத்தத்தில் இறங்கியபின் பருத்திக்குக் கிராக்கியில்லாததால் பருத்தி உற்பத்தியைக் குறைத்து உணவுப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டுமென்று இந்தியா அரசாங்கத்தார் சிந்து மாகாண அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்கள். தேசம் எங்குமே உணவுப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும்.

தமிழ் நாட்டில் உள்ள கை நெசவுத்தொழிலாளர் மகா நாடு ஒன்று திருநெல்வேலி நகர சபைத்தலைவர் தலைமையில் கூடியது. ஐக்கிய நாணய சங்க ரிஜிஸ்தரார் ஸ்ரீ சத்தியநாதன் அதனைத் திறந்து வைத்தார். சேலத்தில் சுமார் ஏழாயிரம் தறிக்காரர்களுக்கு அரசாங்கத்தார் ஆதரவளித்திருக்கிறார்கள். அவர்கள் நூல் வாங்கி, நெசவுக்காரருக்குக் கொடுத்து, அவர்கள் நெய்து கொடுக்கும் துணியை நியாயமான விலைக்கு வாங்கிக்கொள்கிறார்கள். மற்ற இடங்களிலும் இவ்வாறு செய்ய யோசனை நடந்து வருகிறதாம்.

* * *

வட நாட்டில் பயிர்களுக்குப் பெரிய சத்துருவாக விளங்கும் வெட்டுக்கிளிகளைப் பஞ்ச காலத்தில் ஜனங்கள் நல்ல உணவாகச் சாப்பிடுகிறார்களாம். மெக்ரான் என்ற இடத்தில் சமீபத்தில் 2790 மணங்கு நிறையுள்ள வெட்டுக்கிளிகளைச் சேகரித்து உணவாகச் சாப்பிட்டார்களாம்.

* * *

யுத்த காலத்தில் உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று இலங்கை அரசாங்க மந்திரி ஒருவர் வற்புறுத்தியதன் பயனாக இலங்கைத் தீவில் உணவுப் பொருள் உற்பத்தி விஷயத்தில் அதிக ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஓர் ஊரில் சில வக்கீல்கள் சேர்ந்து விவசாயம் செய்வதற்கென்று ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்களாம். இது நல்ல விஷயம். தற்காலத்தில் கல்வி கற்ற நாகரீக மனிதர்களுக்கு உணவுப் பொருள்கள் எங்கிருந்து வருகின்றன என்பதே தெரியாது. மேல் நாடுகளில் சிலருக்குப் பால் என்பது எங்கிருந்து வருகிறதென்று தெரியாது. ரொட்டிக்கும் கோதுமைக்கும் உள்ள சம்பந்தமும் அவர்களுக்குத் தெரியாது. இங்கிலாந்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் பாலைப்பற்றிக் கேள்வி கேட்டதில் இரண்டே சிறுவர்களுக்கு மட்டுந் தான் பால் பசுவிலிருந்து வருகிறதென்று தெரிந்ததாம். எனவே நமது நாட்டிலும் கல்வி கற்றவர்கள் விவசாய விஷயத்தில் இது வரை பராமுகமாயிருந்தது போல இராமல், அவ்விஷயத்தில் சிந்தை செலுத்தி நாட்டிலே உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கி சோற்றுப் பஞ்சத்தை ஒழிக்க முற்படவேண்டும்.

---

# சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டு களின் யூனியன்.

---

## 31-3-1942 உடன் முடிந்த ஒரு மாத அறிக்கை.

1-2-1942 வரை யூனியன் செய்த வேலையைப்பற்றிய அறிக்கை கிராமப் பஞ்சாயத்துப் பத்திரிகை நாலாவது வால்யூம் பத்தாவது பகுதியில் வெளியிடப்பட்டது.

இன்றையத்தேதி ரொக்க இருப்பு ரூ. 12,000 ஜாக்கிரதையான நிர்வாகத்தால் இந்த மிச்சம் ஏற்பட்டிருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். 1940-1941, 1941-1942 இரண்டு வருஷங்களிலும் பத்திரிகை வாங்கிய எல்லா பஞ்சாயத்து சபைகளும் நாங்கள் அனுப்பிய வி. பியை அங்கீகரித்து, சந்தாத் தொகையைச் செலுத்தியிருந்தால், இன்னும் 1,000 அல்லது 1,200 ரூபாய் அதிகமாக நம்மிடம் இருக்கும் 500 அல்லது 600 பஞ்சாயத்து சபைகள் வரை பத்திரிகையைப் பெற்றுக்கொண்டிருந்தும் பணம் செலுத்தவில்லை யென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தங்கள் பலமும் நலமும் யூனியன் பலத்தைப் பொறுத்திருக்கிறதென்பதையும், யூனியன் என்பது தங்கள் சொந்த ஸ்தாபனம் என்பதையும் இந்தப் பஞ்சாயத்து சபைகள் இன்னும் உணரவில்லை. இங்கு வந்திருக்கிற பிரதிநிதிகள் பிரசாரம் செய்து தங்கள் ஜில்லாக்களில் ஏராளமான பஞ்சாயத்து சபைகள் மெம்பர்களாகச் சேர்ந்து பத்திரிகைகளுக்குச் சந்தாதாராகும்படி செய்து யூனியன்களைப் பலப்படுத்தும்படி வேண்டிக் கொள்கிறோம். யூனியன்களின் செல்வாக்கு ஏற்படுவதற்குரிய பலமும் சக்தியும் ஏற்படுவதற்குப் பஞ்சாயத்து சபைகளின் தொகையும் அதிகமாக வேண்டும்.

காகிதத்தின் விலை அதிகமாக ஏறிவிட்டபடியால் பயனுள்ள எல்லா விஷயங்களையும் பத்திரிகையில் வெளியிட முடியவில்லை. பத்திரிகையின் சந்தாவை மூன்று ரூபாயாக உயர்த்துவதற்கு அரசாங்கத்தார் அநுமதி கொடுத்திருப்பதுபற்றி மகிழ்ச்சி யடைகிறோம். இந்தச் சந்தா மிகவும் சொற்பமானது. மிகுந்த ஏழையான பஞ்சாயத்து சபைக்கூட எளிதாகப்பணம் கட்டிச் சந்தாதாராகச் சேரலாம். இதனால் அடையும் பயனோ மிகவும் பெரிது. இந்த சந்தாவைச் செலுத்தி எல்லாப் பஞ்சாயத்து சபைகளும் யூனியனை ஆதரிக்குமென்று நம்புகிறோம்.

அரசாங்கத்தார் பஞ்சாயத்து மசோதாவைப்பற்றி விவாதித்துத் தங்கள் கருத்தை அறிவிக்கும்படி ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வருகையின் பயனாக ஜனங்களின் அரசாங்கம்

திரும்பவும் ஏற்பட்டு ஆலோசனையாளர்களிடமிருந்து அதிகாரத்தை ஏற்றுக்கொண்டாலன்றி, இந்தக் கமிட்டியார் விரைவில் சந்தித்து வேலை தொடங்குவார்கள். கமிட்டியிலுள்ள உங்கள் பிரதிநிதிகளுக்குத் துணையாக உங்கள் ஆலோசனைக்குச் சில தீர்மானங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். இனி மூன்று வருஷத்திற்குத் தெரிந்தெடுக்கப்படுகிற புதிய நிர்வாக சபையார் யூனியன் வேலையில் ஊக்கமும் உழைப்பும் கொண்டு, அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல், கூட்டங்களில் கிரமமாக ஆஜராகி வேலை செய்து பஞ்சாயத்து முயற்சிக்குச் சிறந்த துணையாகச் செய்வார்களென்று நம்புகிறோம்.

# பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் பொதுக்கூட்டம்.

## தீர்மானங்கள்.

சென்னை அரசாங்கத்தார் ஒரு பஞ்சாயத் மசோதாவை வெளியிட்டு அதுபற்றி ஆலோசிக்கும் பொருட்டு ஒரு கமிட்டியும் நியமித்திருக்கிறார்கள். இதன் அடியில் விவரித்திருக்கிற முறையில் மசோதாவைத் திருத்தி அமைத்தாலன்றி அது பொதுவாக பஞ்சாயத்துகளால் ஏற்றுக்கொள்ளத்தக்க நல்ல என்று இந்த யூனியன் மாகாண சபை கருதுகிறது. அதனால், மகாசபை இங்கு விவரித்திருக்கிற தங்கள் கருத்துகளை வற்புறுத்தும்படி கமிட்டியில் உள்ள தனது பிரதிநிதிகளை வேண்டிக் கொள்கிறது.

1. பஞ்சாயத்துக்களின் மேற்பார்வையும் நிர்வாகமும் சுதந்தரமான மாகாண உத்யோகஸ்தரான பஞ்சாயத்துகளின் ரிஜிஸ்தாரரிடம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று இந்த மகாசபை கருதுகிறது. மாகாணப் பஞ்சாயத்து ரிஜிஸ்தாரருக்கு ஜில்லாப் பஞ்சாயத்து ஆபீசர்கள் உதவியாயிருக்கவேண்டும். அந்தந்தப் பகுதியில் உள்ள கூட்டுக்கமிட்டியின் சம்மதம் அல்லது யோசனையில்லாமல்; பஞ்சாயத்து ரிஜிஸ்தரார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது.

2. i. ஒவ்வொரு கிராமத்திற்கும் கட்டாயமாகப் பஞ்சாயத்து சபை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மகாசபை கருதுகிறது. கிராமங்கள் சிறியனவாயும் வரும்படி குறைவாயும் இருந்தால் சில கிராமங்களைச் சேர்த்து, ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தலாம். இந்தக் கட்டாய ஏற்பாடு ஐந்து வருஷம் முதல் பத்து வருஷம் வரை நடைபெறலாம்.

ii. பதினாயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட நகரத்தன்மையிருந்த பெரிய கிராமங்களைப் பஞ்சாயத்து மசோதாவிலிருந்து நீக்கி, ஸ்தல ஸ்தாபனச் சட்டத்தின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று இந்த மகாசபை கருதுகிறது.

iii. வயது வந்தவர்கள் வாக்குரிமை முறையில் பஞ்சாயத்துகளுக்குத் தேர்தல் நடைபெறவேண்டும்.

iv. ஒவ்வொரு ரெவின்யூ பிர்க்காவுக்கு அல்லது பஞ்சாயத்துகளின் தொகை வருவாய் முதலியவற்றிற்கு ஏற்ற மாதிரி சிறிய அல்லது பெரிய பகுதிக்கு

ஜாயிண்டு கமிட்டிகள் கட்டாயமாக ஏற்படுத்தவேண்டும். இந்தக் கூட்டுக் கமிட்டிகளின் அமைப்பு முறை யூனியன் தயாரித்திருக்கிற பஞ்சாயத்து மசோதாவில் 36 முதல் 41 வரை உள்ள பிரிவுகளில் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

3. எக்ஸ் அபிஷியோ உத்தியோக முறையில் அங்கத்தினர் என்ற பழைய கால முறையைத் திரும்பக் கொண்டுவருவது பற்றியும்,, பஞ்சாயத்து நடவடிக்கைகளில் கிராமக் கர்ணத்தைச் சேர்த்துக்கொள்வது பற்றியும் இந்த மகாசபை பலமாகக் கண்டிக்கிறது. கிராம பெரியதனக்காரர் தேர்தலுக்கு நிற்கும் விஷயத்தில் ஆட்சேபம் இல்லை.

4. பஞ்சாயத்து சபைகளுக்கு போதுமான நிலையான பொருள்கள் ஏற்பாடு செய்தாலன்றி பஞ்சாயத்துகள் கிராமங்களின் பரிதாப நிலையைச் சீர்திருத்தம் செய்ய முடியாதென்று இந்த மகாசபை கருதுகிறது. வரிப்பணத்தில் பெரும் பகுதியைக் கிராம வாசியே நேரான முறையிலோ வேறு முறையிலோ செலுத்துகின்றபடியால் அந்த வரியில் ஒரு சரியான பகுதியைக் கிராமவாசியின் முன்னேற்றத்திற்குச் செலவிட வேண்டியது நியாயமாகும். அதனால்

i. நிலவரியில் ரூபாய்க்கு இரண்டணாவுக்குக் குறையாமல் ஒரு பகுதி கிராமத்திற்காகக் கொடுக்கவேண்டும்.

ii. கிராமத்தில் வசூலாகிற லாண்டு ஸெஸ் பணத்தில் மூன்றில் இரு பகுதி ஜில்லா போர்டுகள் இதுவரை செய்துவந்த பல வேலைகளைப் பஞ்சாயத்துகள் இப்பொழுது செய்து வருவதை உத்தேசித்துப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

iii. ஏரிகள், குளங்கள், கால்வாய்களின் குளம்பாசி /மீன் பிடிக்கும்/ வரி பஞ்சாயத்துகளுக்கே கொடுக்கப்பட வேண்டும்.

iv. பொது மராமத்து இலாக்கா அல்லது ஸ்தல ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான கால்வாய்கள், ஏரி, ஆறு, குளக்கரைகளிலும் வரிவிதித்த தரிசு நிலங்களிலும், காற்றில் விழும் மரங்கள், பட்டுப்போன மரங்கள், இவற்றின் காய்கள்; பழங்கள், புல் இவற்றின் ஏலத்தொகைகள் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

v. பவுண்டு வரும்படியும்

vi. நூஸென்ஸ் வழக்குகளில் கிடைக்கும் அபராதத் தொகைகளும் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

5. ஸ்தல ஸ்தாபனச் சட்டத்தின் ஷெட்யூலிலும், 1920ம் வருஷத்து 15 வது சட்டத்திலும் குறித்த சகல அதிகாரங்களும் கடமைகளும் பஞ்சாயத்தாருக்கு இருக்க வேண்டும் என்று இந்த மகாசபை கருதுகிறது. முக்கியமாக,

i. கிராமத்தில் ஆரம்பக்கல்வி.

ii. ஊர்ப்பொது வேலைகள் சொத்துக்களின் நிர்வாகமும் மேற்பார்வையும்.

iii. பொது மராமத்து இலாகாவுடன் சேர்ந்த விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீரை மேற்பார்த்தலும், விநியோகத்தை நிர்வகித்தலும்.

iv. குடி மராமத், ஏரி குளங்கள், கால்வாய்களை மேற்பார்த்தலும் பழுது பார்த்தலும்.

v. காடுகளின் மேற்பார்வை, இவை பஞ்சாயத்துக்களின் அதிகாரத்தில் இருக்கவேண்டும்.

6. பஞ்சாயத்துகளின் சொத்துகள் விஷயத்தில் இப்பொழுதுள்ள சீர்கேடுகள் நீக்கப்பட வேண்டும்.

i. கிராமத்திலுள்ள சகல பொது இடங்கள், ரஸ்தாக்கள், பாதைகள் முதலியனவும்.

ii. சகல புறம்போக்குகளும், களங்களும் மற்றப் பொதுச் சொத்துகளும்.

iii. பொது மராமத்து இலாக்காவில் சம்பந்தப்படாத சகல ஏரி குளங்கள், கால்வாய்கள், நீர் நிலயங்கள் இவற்றின் நிர்வாகம் பஞ்சாயத்திடம் இருக்குமாறு விதிகள் ஏற்பட வேண்டும்.

7. ரூரல் கைடுகள் என்ற நாட்டுப்புறக் காவலர்களை அரசாங்கத்தார் மாகாணப் பஞ்சாயத் போர்டு யூனியன் அல்லது மாகாணப் பஞ்சாயத் யூனியன்களுடன் சேர்த்துப் பயிற்சி செய்யவேண்டும் என்று இந்த மகாசபை கருதுகிறது. பஞ்சாயத்து சபைகள் தங்கள் வேலைகளைக் கிரமமாகவும் திறமையாகவும் செய்வதற்கு இந்த கைடுகள் உதவியாயிருப்பார்கள். மாகாணப் பஞ்சாயத்து போர்டு யூனியன் தயார்செய்திருக்கிற திட்டப்படி இந்த கைடுகளைப் பயிற்சி செய்விக்கலாம். அவர்கள் பஞ்சாயத்துக்களுக்கு குமாஸ்தாக்களாகவும் வேலை செய்யலாம்.

# மதருஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு:

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

சைதாபேட்டை பிராஞ்சு:

38, காரிணீஸ்வரர் கோயில் தெருவு, சைதாப்பேட்டை.

பிரசிடேண்டு:

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி.

ஸெக்ரடேரி:

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காராக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியன்னா, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 117 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | 1,30,00,000. |
| க்ஷேமநிதி | — | 10,00,000. |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்**, எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.